2019 ஜூலை 8]

அவர்களுடைய அரசைப் பாராட்டி நன்றி சொன்னதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை நாங்கள் Syntel Company *வெகு விரைவில் தொடங்கப்படும் என்று உத்தரவாதம் தந்தோம். அதேபோல, 2.64 இலட்சம் சதுர அடியில் அந்த நிறுவனம் தற்பொழுது* Atos Syntel *என்ற பெயரில் தொடங்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது அதில் 2018–2019–ல் படித்த 2,500* freshers*–ஐ மட்டும் எடுக்கிறார்கள். அந்த நிறுவனம், 2,500 படித்த ஏழையெளிய மாணவர்களுக்கு அல்லது படித்து முடித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய நிறுவனமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ யார் எந்தக் கோரிக்கை வைத்தாலும் நாங்கள் உடனடியாக வேலைவாய்ப்பை வழங்குகிறோம் என்று அவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, தகுதியான இளைஞர்கள் இருந்தால், உடனடியாக வேலைவாய்ப்பைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்பொழுது 100 இளைஞர்களை வைத்துத்தான் அந்த* Company*–ஐ தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் 2,400 பேர் அந்த நிறுவனத்திற்குத் தேவைப்படுகிறார்கள். எனவே, உங்களுக்கு விருப்பமிருந்தால் இளைஞர்களை அங்கே அனுப்பி, உடனடியாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

அடிப்படை வசதிகள்

***9402—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் மலைக் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தங்களையும் வணங்கி, எனது விடையை இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் மலைக் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான அனைத்து வசதிகளையும் சிறப்பாகச் செய்து கொடுத்திருக்கிறது. மேலும், பக்தர்களின் வசதிக்காக குடிநீர் வசதி, குளியல் அறைகள், கழிவறைகள், பக்தர்கள் தங்கும் மண்டபம், ஓய்வறைகள் மற்றும் உணவருந்தும் மண்டபம் ஆகியவற்றோடு பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய ஏதுவாக அனைத்து வசதிகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியில் செய்து தரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 கோடி தமிழ் மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவி, எங்கள் அம்மா, வங்கக் கடலோரம் துயில் கொண்டு நம்மையெல்லாம் நல்வழி நடத்தும் வழித் துணை தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2019 ஜூலை 8]

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் 'அத்திவரதர்' தரிசனம் 1979–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் நடைபெற்றது. அதன் பிறகு, தமிழ்நாட்டின் வளம் மற்றும் வளர்ச்சி பெருகியது. அதற்குப் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் இப்பொழுது 'அத்திவரதர்' தரிசனம் கிடைத்திருக்கிறது.

அத்திவரதர் சுவாமி அருளாசியோடு தமிழ்நாட்டில் வறட்சி நீங்கி நல்ல மழை பெய்யும், வளம் பெருகும், நல்ல நிலை உருவாகும். இனி யார் நினைத்தாலும் அண்ணன் எடப்பாடியார் தலைமையில் உள்ள அம்மாவின் ஆட்சியை அசைக்க முடியாது. இனி எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிதான் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு விநாயகர் திருத்தேர், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருத்தேர் ஆகிய புதிய தேர்கள் செய்ய அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் திருச்செங்கோடு தொகுதி மக்களின் சார்பாகவும், பக்தர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் மலைக் கோயிலின் உபகோயிலாகும். அந்தக் கோயிலுக்கு பிரதோஷ காலத்தில் ஏராளமான பக்தர்கள் வழிபாடு செய்ய வருகிறார்கள். இவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் இல்லை. இந்தக் திருக்கோயில் கொங்கு ஏழு சிவஸ்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இக்கோயிலுக்கு சிவ பக்தர்கள் அதிகமாக வருகை புரிவதால், இங்கு தங்கும் விடுதி அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திருத்தேரும், அருள்மிகு விநாயகர் வாகனத்திற்கு ரூ.16.50 இலட்சம் செலவில் ஒரு திருத்தேரும் வழங்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, இந்த நிதியாண்டில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய இரண்டு மசோதாக்களுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தை அணுகுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*